டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 250 - Madurai | Online Edition

# சிலிண்டர்கள் விநியோகம் இயல்பாக உள்ளது செய்தியாளர் சந்திப்பில் அதிகாரிகள் தகவல்



புது தில்லி, ஏப்.18

மேற்காசியாவில் நிலவும் சூழலுக்கு இடையே மத்திய அரசு மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கைகள் குறித்து புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (17.04.26) ஊடகவியலாளர்களிடம் விளக்கப்பட்டது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் எரிபொருள் இருப்பு, கடல்சார் நடவடிக்கை, மேற்காசியாவில் இந்தியர்களுக்கு அளிக்கப்படும் உதவி, பல்வேறு துறைகளில் நிலைத்தன்மையை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கினர்.

50.5 லட்சம் வீடுகளுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்ட நிலையில் சிலிண்டர்கள் விநியோகம் இயல்பாக உள்ளது என்று மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையைத் தடுக்க பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மேற்கொண்ட சோதனைகளின் போது நேற்று முன்தினம் வரை 255 சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதோடு, 65 விநியோகஸ்தர்களின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறினர்.

இணையம் வழியாக சமையல் எரிவாயு முன்பதிவு செய்வது 98 சதவீதம் அதிகரித்துள்ளது. 5 கிலோ கிராம் எடை கொண்ட

சிலிண்டர்கள் பற்றி 2026 ஏப்ரல் 3-க்குப் பின் 6,100 விழிப்புணர்வு பிரச்சாரசங்கள் மேற்கொள்ளப்பட்டு 80,000 எண்ணிக்கையில் 5 கிலோ கிராம் சிலிண்டர்கள் விற்கப்பட்டு உள்ளன. நேற்று முன்தினம் மட்டும் 400 முகாம்களில் 8,643 சிலிண்டர்கள் விற்கப்பட்டன. 16.04.26 அன்று 8,211 மெட்ரிக் டன் அளவுக்கு வணிக சமையல் எரிவாயு விற்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் இதுவரை ஆட்டோக்களுக்கான எரிவாயு சுமார் 296 மெட்ரிக் டன் விற்பனையாகியுள்ளது.

மார்ச் 2026-க்குப் பின் 4.68 லட்சம் குழாய் மூலமான சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 5.23 லட்சம் வாடிக்கையாளர்கள் புதிய இணைப்புகளுக்குப் பதிவு செய்துள்ளனர்.

வளைகுடா பிராந்தியத்திலிருந்து கடந்த 24 மணி நேரத்தில் 2447 இந்திய மாலுமிகள் பாதுகாப்புடன் நாடு திரும்பி உள்ளனர். மேலும், விமானங்கள் மூலம் பிப்ரவரி 28-க்குப் பின் சுமார் 10,38,000 பயணிகள் மேற்காசியாவிலிருந்து இந்தியாவுக்கு பயணம் செய்துள்ளனர்.

1,041 இந்திய மாணவர்கள் மற்றும் 657 இந்திய மீனவர்கள் உட்பட மொத்தம் 2,358 இந்தியர்கள் ஈரானிலிருந்து அர்மீனியா, அஜர்பைஜான் வழியாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஹஜ் புனிதப்பயணம் மேற்கொள்ளும் முதலாவது தொகுப்பினர் 2026 ஏப்ரல் 18 அன்று சவுதி அரேபியாவிற்குச் செல்லவிருக்கின்றனர் என்ற விவரங்களையும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# தமிழகத்தில் ஏப்.24 வரை லேசான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஏப்.18

தமிழகத்தில் வரும் 24ஆம் தேதி வரை ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிழக்கு உத்தரப் பிரதேசம் முதல் மன்னார் வளைகுடா வரை கிழக்கு மத்தியப் பிரதேசம், விதர்பா, தெலங்கானா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக 22-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

23, 24 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

*நேற்றைய தொடர்ச்சி...*

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**செய்முறை 2 : ஓட்ஸ் பெர்ரி ஸ்மூத்தி**



இந்த சுவையான மற்றும் ஆரோக்கியமான ஓட்ஸ் மற்றும் பெர்ரி ஸ்மூத்தியை உங்கள் காலை உணவில் சேர்த்துக் கொள்வது, உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் செரிமான மண்டலத்திற்கு ஆற்றலை அளித்து, சீரான செயல் பாட்டை உறுதி செய்வதுடன், குழந்தைகள் விரும்பி அருந்தும் பானமாகவும் அமையும். எந்தப் பருவத்திலும், பள்ளிக்குச் செல்லும் முன் குழந்தைகள் அருந்துவதற்கு இது ஒரு சரியான காலை உணவு ஸ்மூத்தியாக அமைகிறது. ஓட்ஸ் ஸ்மூத்திகள் அடர்த்தியாகவும் கிரீமியாகவும் இருப்பதால், உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் வயிறு நிறைந்த உணர்வைத் தரும்.

**தேவையான பொருட்கள்**

- பாரம்பரிய ஓட்ஸ் (சமைக்காதது) – ¼ கப்
- வாழைப்பழம் – ½ நடுத்தர அளவு

● சுவையூட்டப்படாத கிரேக்க தயிர் – ½ கப்

● உறைந்த மாம்பழம் – ¾ கப்

● உறைந்த ஸ்ட்ராபெர்ரிகள் – ¾ கப்

● உறைந்த புளூபெர்ரி – ½ கப்

● உங்களுக்கு விருப்பமான பால் (பால் சார்ந்த/ பாதாம்/ தேங்காய்) – ¾ கப்

குறிப்பு : உங்களிடம் இவை அனைத்தும் (மாம்பழம், ஸ்ட்ராபெர்ரி, ப்ளூபெர்ரி, வாழைப்பழம்) இல்லையென்றாலும் பரவாயில்லை. இவற்றில் ஏதேனும் ஒன்றை அல்லது இரண்டைப் பயன்படுத்தலாம். பழங்கள்/பெர்ரிகளைச் சேர்ப்பது உங்கள் ஸ்மூத்திக்கு கூடுதல் சுவையைக் கொடுக்கும்.

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : அனைத்துப் பொருட்களையும் ஒரு பிளெண்டரில் போட்டு, மிருதுவாகும் வரை கலக்கவும்.

படி 2 : ஸ்மூத்தியை அலங்கரிப்பதற்காக, நறுக்கிய கொட்டைகள் / ஆளி விதைகள் / உருகிய டார்க் சாக்லேட் ஆகியவற்றை சிறிதளவு தூவி மகிழுங்கள்.

படி 3 : சுலபமான மற்றும் சுவையான பானம் பருகத் தயாராகிவிட்டது!

**செய்முறை 3 : காய்கறி கோல்ஸ்லா சாண்ட்விச்**



சாண்ட்விச்கள் செய்வதற்கு எளிதாகவும், எடுத்துச் செல்ல வசதியாகவும் இருப்பதால், நாம் அனைவரும் அவற்றை விரும்புகிறோம். சாண்ட்விச்கள் எளிமையான, சுவையான, மனதிற்கு இதமான உணவாகும். இதில் நாம் விரும்பும் அனைத்துப் பொருட்களையும், டாப்பிங்குகளையும் நம் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளலாம். நம் ஒவ்வொருவருக்கும், சாண்ட்விச்கள் நிறைந்த மதிய உணவுப் பெட்டிகளின் நினைவுகளுடன்

கூடிய குழந்தைப்பருவ ஏக்கம் உண்டு. எனவே, இந்த அற்புதமான உணவைச் செய்து சாப்பிடும் போது, குழந்தைகளையும் அதன் மீது காதல் கொள்ள வைப்போம்.

**தேவையான பொருட்கள்**

- முக்கோண வடிவ ரொட்டித் துண்டுகள் - (உங்கள் பரிமாறலுக்கு ஏற்ப) எட்டுத் துண்டுகளை எடுத்துக் கொள்வோம்.
- மயோனைஸ் (விருப்பப்பட்டால்) - 6 மேசைக்கரண்டி
- சீஸ் துண்டுகள்– 4
- துருவிய கேரட் – ½ கப்
- துருவிய முட்டைக்கோஸ் – ½ கப்
- பொடியாக நறுக்கிய லெட்யூஸ் – ½ கப்
- சுவைக்கு ஏற்ப உப்பு மற்றும் மிளகுத்தூள்
- தக்காளி கெட்ச்அப் அல்லது பார்பிக்யூ சாஸ், பெரி–பெரி போன்ற வேறு ஏதேனும் சாஸ்கள்.

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : ஒரு சிறிய கிண்ணத்தை எடுத்து, அதில் எல்லா காய்கறிகளையும் சேர்க்கவும்.

படி 2 :
- 2 தேக்கரண்டி மயோனைஸ் சேர்க்கவும்.
- சுவைக்கு ஏற்ப உப்பு மற்றும் மிளகுத்தூள் தூவவும்.
- எல்லாவற்றையும் ஒரு கரண்டியால் கலக்கவும்.

படி 3 : உங்கள் ரொட்டித் துண்டுகளின் மீது மயோனைஸ் அல்லது உங்களுக்கு விருப்பமான சாஸ்களைத் தடவவும்.

படி 4 : ஒவ்வொரு ரொட்டித் துண்டின் மீதும் ஒரு சீஸ் துண்டை வைக்கவும், பின்னர் கோல்ஸ்லாவை சிறிதளவு எடுத்து அந்த ரொட்டித் துண்டுகளின் மீது சமமாகப் பரப்பவும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

படி 5 : இப்போது, மயோனைஸ் தடவிய ரொட்டித் துண்டைக் கீழ்நோக்கி வைக்கவும்.

படி 6 : மேலும் சாண்ட்விச்கள் செய்ய, படிகள் 4 மற்றும் 5-ஐ மீண்டும் செய்யவும்.

படி 7 : உங்களுக்குப் பிடித்தமான சாஸ்களுடன் உங்கள் சாண்ட்விச் பரிமாறத் தயாராகிவிட்டது. உங்கள் குழந்தை இதை நிச்சயம் விரும்பிச் சாப்பிடும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஏப்.18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நாட்கள் பயிற்சி வருகிற 21.04.26 மற்றும் 22.04.26 தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். இந்த பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப்

பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்கள் எளிய முறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன :

- றொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ்

இத்தொழில் நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) கோயம்புத்தூரில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# பயிர் வகை பயிர்களின் முக்கியத்துவம் குறித்து பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு வகுப்பு எடுத்த வேளாண்மை உதவி இயக்குனர்




பெரம்பலூர், ஏப்.18

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உரம், பூச்சி மருந்து விதை விற்பனை செய்ய உரிமம் பெற வேண்டியதற்கான பட்டயப் படிப்பு வகுப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் வகுப்பு எடுத்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், ஹைதராபாத்தில் உள்ள மேனேஜ் நிறுவனம் மற்றும் குடுமியான் மலையில் உள்ள சமிதி ஆகியவைகள் மூலம் இந்த பட்டய படிப்பு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. நேற்று 17.4.26 அன்று முனைவர் பொன்விழி ரம்யா ஒருங்கிணைப்பாளர், அறிமுகம் செய்து வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், கலந்து கொண்டு வகுப்பில் மாணவர்களுக்கு எளிதாக புரியும்படி பயிர் வகை பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் இந்த பட்டயப் படிப்பின் நோக்கம், எவ்வாறு செயல்பட்டு விவசாயிகளுக்கு உதவி செய்திட வேண்டும், வேளாண்மை தொழில் நுணுக்கங்களுடன் பயிருக்கு தேவையான சத்துக்கள் கொடுக்கக்கூடிய உரங்கள், இயற்கை உரங்கள் ஆன, பசுந்தால் பயிர், பசுந்தால் இலை பயிர், உயிர் உரங்கள், அதன் செயல்பாடு, அனைத்து வகையான இயற்கை எருவு வகைகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், செயற்கை உரங்கள் கலப்பு உரங்கள், கூட்டுவுரங்கள் உரங்களின் வகைப்பாடு அதன் செயல்பாடு,




இரண்டாம் நிலை உரங்கள் அவற்றின் வகைப்பாடு மற்றும் செயல்பாடு, நுண்ணூட்ட உரங்கள் அவற்றின் வகைப்பாடு மற்றும் செயல்பாடுகள், நானோ உரங்கள் அவற்றின் செயல்பாடுகள், ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை பற்றி, வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மாணவர்களுக்கு வகுப்பு எளிமையாக, அனைத்தும் புரியும்படி, பயனுள்ள வகையில், வகுப்பு எடுத்தார். இந்த வகுப்பில் 40 மாணவர்கள் பட்டாயா படிப்பிற்காக கலந்து கொண்டனர். வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகளான புனிதாவதி மற்றும் கோகிலவாணி கலந்து கொண்டார். மாணவர்களுக்கு நடைபெற்ற தேர்வில் அனைவரும் கலந்து கொண்டனர் இதை வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தேர்வு நடை பெற்றதை பார்வையிட்டார்.

வேளாண் அறிவியல் மைய தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வசந்த் குமார் தெரிவித்தார்.

# சூரியகாந்தி விதை ரூ.17 லட்சத்துக்கு ஏலம்

ஈரோடு, ஏப்.18

ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சூரியகாந்தி விதை ஏலம் நடந்தது. இதில் வாணியம்பாடி, திருப்பத்தூர், கரூர், திண்டுக்கல், திருச்சி பகுதிகளை சேர்ந்த 21 விவசாயிகள் 28,113 கிலோ சூரியகாந்தி விதையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

வெள்ளகோவில், காங்கயம், முத்தூர், ஊத்துக்குளி பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்க வந்திருந்தனர். அதிகபட்சமாக ஒரு கிலோ சூரியகாந்தி விதை அதிக பட்சமாக ரூ.67.20க்கும், குறைந்தபட்சமாக ரூ.55.65க்கு ஏலம் போனது. மொத்தம் ரூ.17 லட்சத்து 55 ஆயிரத்துக்கு வணிகம் நடைபெற்றது. இத்தகவலை வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட முதுநிலைச் செயலாளர் தெரிவித்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வருமானத்தை அள்ளி தரும் ‘வெட்டி வேர் சாகுபடி‘



இந்த வெட்டி வேர் (VETIVAR) இந்தியாவை தாயகமாக கொண்ட வாசனை வேர். இது வெப்ப மண்டல பயிர். இதனை CHRYSOPOGAN ZIZANIOIDES என்ற அறிவியல் பெயராகும். வெட்டிவேர் வட இந்தியாவை விட தென்னிந்தியாவில் அதிக அளவாக உள்ளது.

இந்த வெட்டிவேர் இரண்டு வகை பயிரிடப்படுகிறது.

1) நாற்று வகை. இந்த வகை. வட இந்தியாவில் பயிரிடப் படுகிறது.

2) நாற்று இல்லாத வகை. இது தென்னிந்தியாவில் கடைபிடிக்க கூடியது. இதில் கலப்பு 8, சுகந்தா, ஓடிவி 3 ஆகிய ரகங்கள் சாகுபடிக்கானது.

ஆற்றுபடுகைகள், செம்மண், கரிசல், களிமண்ணில் நன்றாக வளரக்கூடியது. இது ஒரு பல்லாண்டு வகை தாவர மாகும். நல்ல மணமுள்ள இதன் வேர்கள் மண்ணில் சுமார் 10 மீட்டர் ஆழம் வரை ஊடுருவி செல்லுவதால் மண் அரிப்பை தடுக்க பயன்படுத்தப்படுகிறது. இதனால் என்னவோ வெட்டி வேர் மண்வளத்தை (SOIL EROSION ) தடுத்து மண்ணை காக்கும் வேர் என விவசாயிகளால் அழைக்கப்படுகின்றன.

**சாகுபடிமுறை?**

சமீப காலமாக வெட்டிவேரை குரோ பேக் (GROW BAG - CULTIVATION) மூலமாக சில ஒப்பந்த நிறுவனங்கள் மூலமாக சாகுபடி செய்யப்படுகிறது. இது தமிழகத்திலுள்ள பல இடங்களில் இந்த முறை குறைந்த இடத்தில் அதிகளவிலான குரோ பேக் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.



### மண் வளம்

நல்ல வடிகால் வசதியுள்ள மண் வளம் வெட்டி வேர் சாகுபடிக்கு ஏற்றதாகும். கார அமில நிலை 6-8 என இருக்க வேண்டும்.

### இனப்பெருக்கம்

வெட்டிவேர் துண்டுகள் (SLIPS) மூலமாக நடவு செய்யப் படுகிறது. ஏக்கருக்கு 40000 - 60000 வரை தேவைபடும். 5 முதல் 8 செ.மீ ஆழமுள்ள குழிகளில் நடவு செய்ய வேண்டும். வேரிலிருந்து அதிக அளவு எண்ணெய (OIL EXTRACTION) கிடைக்க ஜீன்- ஜீலை மாதங்களில் நடவு செய்வது நல்லது.

### உர அளவு

ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் மற்றும் பயிரின் வளர்ச்சி கேற்ப உயிர் உரங்கள் பஞ்ச காவியா போன்றவற்றை தெளிக்கலாம்.

### பயிர் பாதுகாப்பு

வெட்டி வேரில் பூச்சி நோய் தாக்குதல் குறைவாக தான் இருக்கும். கரையான், வெள்ளை எறும்பு போன்றவை தாக்கும். அதைதடுக்க வேப்ப எண்ணெய் மருந்து தெளிக்கலாம். வேரில் பூயுசோரியம் என்ற பூஞ்சான தொற்று காணப்பட்டால் புளூ காப்பர் என்ற மருந்தை 2 மிலி / ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

### அறுவடை செய்தல்

நடப்பட்ட 18 மாதங்களில் அறுவடை செய்ய வேண்டும்.




கைகளால் செடியை வேருடன் சேர்த்து தோண்டி எடுக்கப் படுகிறது. வேர்களை இலைகளிலிருந்து தனியாக பிரித் தெடுக்கப்பட்டு நன்றாக நீரில் கழிவி நிழலில் 2-3 நாட்கள் உலர்த்த வேண்டும் (SHADE DRYING).

**மகசூல்**

ஏக்கருக்கு 1-2 டன் வேர்களும் அதிலிருந்து 8-10, கி.கி எண்ணெய் கிடைக்கும். ஒரு கிலோ வேர் தற்போது 200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**பயன்கள்**

இந்த வேரை திரைபோல பின்னி வெயில் காலங்களில் வீட்டு முற்றம், ஜன்னல்கள் மற்றும் தாழ்வாரங்களில் கட்டி தொங்க விட்டு, அவ்வப்போது திரையின் மீது தண்ணிய தெளிப்பார்கள். அப்போது வெட்டிவேரிலிருந்து உருவாகும் குளிர்ச்சி வீடு முழுவதுமாக பரவி இயற்கையாகவே ஒரு இதமான நிலையை வெட்டிவேர் உருவாக்கும். கூடவே அதனுடைய மணமும் மூச்சுக்காற்றை குளிர்விக்கும் ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது.

பொதுவாக வெட்டி வேரிலிருந்து வரும் காற்று உடல்சூடு, தாகம், மன அழுத்தம் போன்றவற்றை குறைக்க உதவும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# பூச்சிகளைப் கட்டுப்படுத்துவதில் தாவர பூச்சிக்கொல்லிகளின் பங்கு



பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் தாவரப் பூச்சிக் கொல்லிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை இயற்கை வழிகளில் தயாரிக்கப்படும் மருந்துகளாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானவையாகவும் அறியப்படுகின்றன.

## தாவரப் பூச்சிக்கொல்லிகளின் அறிமுகம்

தாவரப் பூச்சிக்கொல்லிகள் என்பவை வேம்பு, துளசி, ஆடாதொடை, நொச்சி, அகத்தி, பூண்டு, மிளகாய் போன்ற தாவரங்களிலிருந்து திரட்டப்படும் பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. இவை பூச்சிகளை விரட்டியடிப்பதோடு அவற்றின் வளர்ச்சியையும் தடுக்கின்றன. ரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் போல இவை மண், நீர், காற்றைப் பாதிக்காமல் பயிர்களைப் பாதுகாக்கின்றன. இவற்றின் பயன்பாடு இயற்கை வேளாண்மையில் முக்கியமானது. பயிர்களின் சேதத்தைத் தடுத்து, உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்றன.

## நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தாவரப் பூச்சிக்கொல்லிகள் நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காது, அதனால் இயற்கை சமநிலையைப் பராமரிக்கின்றன. ரசாயன மருந்துகள் 99% சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன என்று கூறப்படுகிறது. இவை உணவுச் சங்கிலியில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துவதில்லை.

விவசாயிகள் இவற்றை எளிதாக தயாரித்து பயன்படுத்தலாம். நீண்ட காலப் பயன்பாட்டில் பூச்சிகள் எதிர்ப்பு திறனும் பெறுவதில்லை.

## பிரபலமான தாவரப் பூச்சிக்கொல்லிகள்



வேம்பு கொட்டைக் கரைசல் கம்பளிப்புழு, அசுவினி, தத்துப்பூச்சி, இலைச் சுருட்டுப்புழு போன்றவற்றை கட்டுப்படுத்தும. துளசி, பூண்டு, மிளகாய் சாறு பயிர்களை உண்ணும் பூச்சிகளை விரட்டுகிறது.

நொச்சி, அகத்தி தாவரங்கள் துகள் வடிவில் பயன்படுத்தப் படுகின்றன. இவை பசை அல்லது சாறு வடிவிலும் கிடைக்கின்றன.

### தயாரிப்பு முறைகள்

வேம்பு எண்ணெயை சோப்பு நீருடன் கலந்து தெளிக்கலாம். 50 கிராம் வேம்பு இலைகளை 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி பயன்படுத்தவும். பூண்டு 50 கிராம், மிளகாய் 25 கிராம், தண்ணீர் 1 லிட்டரில் 24 மணி நனைத்து தெளிக்கலாம்.

இவற்றை காலை அல்லது மாலை நேரத்தில் தெளிப்பது சிறந்தது. 10-15 நாட்களுக்கு ஒரு முறை திரும்பத் தெளிக்கவும். வீட்டுத் தாவரங்களுக்கும் இவை பயன்படுத்தலாம். இயற்கையானவை என்பதால் பாதுகாப்பானவை.

### குறிப்பிட்ட பயிர்களில் பயன்பாடு

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை வேறுபடுத்தி பார்த்து மருந்து



தேர்ந்தெடுக்கவும். உதாரணமாக, சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு வேம்பு சிறந்தது.

மரப்பயிர்களில் ஆடாதொடை, நொச்சி பயன்படுத்தப் படுகின்றன. தோட்டப் பயிர்களில் உயிரியல் முறையுடன் இணைத்து பயன்படுத்தினால் சிறந்த பலன். பூஞ்சை, பாக்டீரியா கொல்லிகளுடன் கூடுதல் பாதுகாப்பு.

**சவால்கள் மற்றும் தீர்வுகள்**

ரசாயன மருந்துகளுக்கு மாற்றாக இவை பயன்படுத்தப் பட்டாலும், சரியான அளவு கவனிக்க வேண்டும். அதிக அளவு பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கலாம். விவசாயிகள் பயிற்சி பெறுவது அவசியம்.

இயற்கை வேளாண்மைக்கு ஏற்றவாறு உயிரியல் கொல்லி களுடன் இணைப்பது சிறந்தது. அங்கக வேளாண்மை கொள்கையின்படி பொருளாதார சேத நிலையைத் தடுக்கவும்.

**எதிர்கால முக்கியத்துவம்**

தாவரப் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. 2025ல் விவசாய சவால்களுக்கு இயற்கை தீர்வாக அறியப்படுகின்றன. நீலம்மாற்று விவசாயத்தை ஊக்குவிக் கின்றன. இவை பயன்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் சாத்தியமாகின்றன.

தகவல் : ***மதுரஞ்சனா.ஜெ, முனிசா.மா, பசுபதி.இ, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை – 625 532.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கறவை மாடுகளை குளம்பு நோயிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள்

சமீப காலங்களில் கன்று ஈனும் பருவத்திலுள்ள மற்றும் கன்று ஈன்ற இளம் மாடுகள் குளம்பு நோயால் அதிகம் பாதிக்கப்பட்டு பால்பண்ணைத் தொழிலில் பொருளாதார நட்டத்தை ஏற்படுத்துகின்றன. சினைக் கருப்பை அழற்சி நோய், நஞ்சுக் கொடி தங்குதல் மற்றும் மடிவீக்க நோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட மாடுகளிலும் இந்நோய் காணப்படுகிறது. சிறந்த பண்ணைப் பராமரிப்பு முறைகளின் மூலம் குளம்பு நோய் வராமல் தடுக்கலாம்.

## நோய்க் காரணிகள்

சுற்றுப்புறச் சூழ்நிலைகளும், தீவனமளிக்கும் முறைகளும், உடற்பயிற்சி இல்லாமையும் இந்நோய் ஏற்பட முக்கியக் காரணங்களாகும். மாட்டுக் கொட்டகையில் மாடுகள் சாணம் மற்றும் சிறுநீர் கலந்த கழிவுகளில் நிற்பதால் அதன் குளம்புகள் பலமிழந்து விடுவதாலும், புதிய கொட்டகைக்கு இடமாற்றம் செய்தவுடன் மாடுகள் சுற்றுப்புறச் சூழலுக்கு பழக்கமில்லாமல் அதிக நேரம் நிற்பதிலேயே செலவிடுவதால் கால் குளம்புகள் சோர்ந்து விடுவதாலும் இந்நோய் ஏற்படுகிறது. தீவனத்தில் அதிகப்படியான மாற்றம் செய்வதாலும், குறைந்த அளவு நார்த்தீவனம், அதிக அளவு கலப்புத் தீவனம் மற்றும் அதிக புரதச் சத்துள்ள உணவு வகைகளை அளிப்பதாலும் குளம்பு நோய் ஏற்படுகிறது.

## நோய் தோன்றும் முறை

அதிக அளவு கலப்புத் தீவனம் தரும்பொழுது லாக்டிக் அமிலம் அதிகம் சுரந்து வயிற்றிலிருந்து குளம்புகளுக்கு இரத்த நாளங்கள் வழியாகச் செல்லும். கர்ப்பப்பை அழற்சி நோய் அல்லது நஞ்சுக் கொடி தங்கினால் நுண்ணுயிர்க்கிருமிகள் நச்சுப் பொருளை ஏற்படுத்தி கர்ப்பப்பையிலிருந்து குளம்பு களுக்கு செல்லும். அதிக புரதச்சத்துள்ள உணவை உண்ணும் பொழுதும் கர்ப்பப்பை அழற்சி நோயிலும் ஹிஸ்டமின் உற்பத்தியாகி குளம்புகளுக்குச் செல்லும். இவ்வாறு குளம்பு களுக்குச் செல்லும் லாக்டிக் அமிலம், நுண்ணுயிர்க்கிருமி நச்சு,

ஹிஸ்டமின் என்னும் வேதிப்பொருள் ஆகியவை இரத்த நாளங்களை பருக்கச் செய்கின்றன. இதனால் இரத்தக் குழாய்களில் இரத்தக் கசிவு ஏற்பட்டு பின் அடைப்பு ஏற்பட்டு பாதங்களில் வீக்கத்தை உண்டு பண்ணுகின்றன.

## நோயின் அறிகுறிகள்

குளம்பு நோய் தீவீரமாக இருக்கும் பொழுது கால் வலியினால் மாடுகளின் முதுகுப்புறம் வளைந்து காணப்படும். மாடுகள் நடப்பதற்கு சிரமப்படும். முன்னங்களால்களை குறுக்காக வைத்துக் கொள்ளும், மாடுகள் படுத்துக் கொண்டேயிருக்கும். எழுவதற்கும் எழுந்து நிற்பதற்கும் சிரமப்படும்.

எழும் பொழுது அதிக நேரம் முட்டி போட்ட நிலையிலேயே இருக்கும். நடக்கும் பொழுது வலி அதிகம் இருப்பதால் கால்களை விரைவில் எடுத்து முன்னே வைக்கும். வியர்வை உடன் நடுக்கமும், தசைகளின் உடல் அதிர்வும் காணப்படும். குளம்புகள் சூடாகவும், குளம்பின் மேல் பகுதி சிவந்தும் காணப்படும். குளம்புகளில் இரத்தக் கசிதலும் உள்ளங் கால்களில் ஆறாத புண்ணும் தோன்றும். நாள்பட்ட குளம்பு நோயில் அறிகுறிகள் குறைந்த தீவிரத்துடன் காணப்படும். வியர்வை, நடுக்கம். உடல் அதிர்வு இருக்காது. குளம்புகள் நீண்டும், அகன்றும், தட்டையாகவும் வெடிப்புகளுடன், குளம்புகள் சுழன்றும் தோற்றம் மாறிபும் இருக்கும்.



## சிகிச்சை முறை

1. கலப்புத்தீவனம் அளிப்பதை குறைக்க வேண்டும்.

2. ஐஸ்கட்டிகள் கலந்த அல்லது குளிர்ந்த தண்ணீரை கால்களில் ஊற்ற வேண்டும். இதனால் வீக்கமானது குறையும்.

3. கழிச்சிலை உண்டு பண்ணும் மருந்தை கால்நடை மருத்துவர் உதவியுடன் அளிப்பதன் மூலம் வயிற்றிலுள்ள நச்சுப் பொருட்கள் கழிச்சலின் மூலம் வெளியேற்றப்பட்டு விடும்.

4. வலிநீக்க மருந்துகளும் அழற்சியைக் கட்டுப்படுத்தும் மருந்துகளும் கொடுக்கப்பட வேண்டும்.

5. இந்நோயுடன் கர்ப்பப்பை அழற்சி நோய், மடிவீக்க நோய், நஞ்சுக்கொடி தங்குதல் போன்றவையும் இருந்தால் கால்நடை மருத்துவர் ஆலோசனைப்படி ஆன்டிபயாடிக் எனப்படும் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளும் தரப்பட வேண்டும்.

6. வயிற்றில் அமிலத்தன்மை ஏற்பட்டால் சோடியம் பைகார்பனேட் மருந்தினை வாய் வழியே தரப்பட வேண்டும்.

7. நாள்பட்ட நோயாக இருந்தால் மாடுகளில் அதிகப் படியாக வளர்ந்த குளம்புகளை வெட்டி விட வேண்டும்.

## தடுப்பு முறைகள்

1. திடீரென்று கலப்புத் திவனத்தில் மாற்றம் செய்யக்கூடாது.

2. கன்று போட்ட பின் கலப்புத் தீவனத்தை படிப்படியாக அதிகப்படுத்த வேண்டும்.

3. நார்த்தீவனம் அதிகம் தர வேண்டும்.

4. கன்று ஈனப்போகும் காலங்களில் மாடுகளுக்குத் தேவை யான அளவு உடற்பயிற்சி தரப்பட வேண்டும்.

5. கொட்டகை அமைப்பை சரி செய்ய வேண்டும்.




6. வயிற்றில் அமிலத் தன்மை ஏற்பட்டால் தினமும் 30 கிராம் அளவு சமையல் சோடாவை கலப்புத் தீவனத்தில் கலந்து தர வேண்டும்.

7. அடர் தீவனம் தருவதற்கு முன் சிறிது பசுந்தீவனம் தந்தால் மாடுகளின் வயிற்றில் அமிலம் அதிகம் உற்பத்தியாவதைத் தவிர்க்கலாம்.

தகவல் : ***டாக்டர். இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை – 625 005.***



# தமிழ்நாட்டில் 12 இடங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில்

சென்னை, ஏப்.18

தமிழ்நாட்டில் 12 இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் மற்றும் அதற்கு மேல் வெயில் கொளுத்தியதால் மக்கள் அவதியடைந்து உள்ளனர்.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக கரூர் பரமத்தியில் 106 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது. வேலூர், ஈரோட்டில் தலா 104, திருப்பூர், தர்மபுரி, மதுரை விமான நிலையம், திருச்சி, நாமக்கல்லில் தலா 102, கோவை மதுரை நகரத்தில் தலா 101, பாளையங்கோட்டை, சேலத்தில் தலா 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் கொளுத்தியது.

## திருச்செங்கோட்டில் கொப்பரை ரூ.2.37 லட்சத்திற்கு ஏல விற்பனை

நாமக்கல், ஏப்.18

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் கொப்பரை ஏலம் நடந்தது.

ஆனங்கூர், சிறுமொளசி, பன்னிகுத்திபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், 42 மூட்டை கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த வியா பாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் முன்னிலையில் ஏலம் நடந்தது.

ஏலத்தில் முதல் தரம் கொப்பரை கிலோ ரூ.143 முதல் ரூ.155 வரையிலும், இரண்டாம் தரம் கொப்பரை கிலோ ரூ.125 முதல் ரூ.132 வரையிலும் விற்பனையானது.

ஒட்டு மொத்தமாக விவசாயிகள் கொண்டு வந்த 42 மூட்டை கொப்பரை ரூ.2.37 லட்சத்துக்கு ஏலம் போனது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333